රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government

ඒකාබද්ධ සේවා අංශය **இணைந்த சேவைகள் பிரிவு** **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07,ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන
தொலைபேசி:**(94) 011- 2694560**
Telephone

ෆැක්ස්
தொலைநகல்:**(94) 011- 2692254**
Fax

ඊ-මේල්
மின்னஞ்சல்:**dgcs@pubad.gov.lk**
E-mail

වෙබ් අඩවිය
இணையத்தளம்: **www.pubad.gov.lk**
Web Site

මගේ අංකය / எனது இல / My No: R/DO/PER.APP/2020

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி: / Date: 2020.05.12

2018.08.20 ஆம் திகதி பட்டதாரிப் பயிலுநர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட வேலையற்ற பட்டதாரிகளை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு நியமித்தல் மற்றும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் III இற்கும் வகுப்பு 2 தரம் II இற்கும் நியமித்தல்

மேற்குறித்த தலைப்பில் வெளியிடப்பட்ட பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2020.05.04 ஆம் திகதிய கடிதத்துடன் தொடர்புடையது.

02. அதற்கிணங்க, புதிதாக நியமனம் பெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை உத்தியோகத்தர்களும் கடமைகளைப் பொறுப்பேற்கும் போது பின்பற்ற வேண்டிய செயலொழுங்குகள் தொடர்பில் நிறுவனத் தலைவர்களுக்கு தெளிவாக அறிவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

03. எனினும் அந்தக் கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க கடமைகளைப் பொறுப்பேற்காமல் சேவை நிலையங்களை திருத்துவது தொடர்பில் விசாரிப்பதற்காக இந்த அமைச்சுக்கு வருவது அவதானிக்கப்படுகின்றது. மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கை உத்தியோகத்தர்களை மாத்திரம் வரவழைத்து சேவைகளை கொண்டு நடாத்தும் தேவைக்காகவே தற்போது அரசாங்க அலுவலகங்களைத் திறப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக மாத்திரமே பொதுப் போக்குவரத்துச் சேவைகள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அதனால், மிகவும் அத்தியவசியமான ஒரு விடயத்திற்காகவன்றி, அழைக்கப்படாமல் இந்த அமைச்சு வருகை தருவதை தவிர்ந்து கொள்ளுமாறு பணிவுடன் அறியத் தருகின்றேன்.

04. மேலும் மேற்குறித்த கடிதத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவனத் தலைவர்கள் உங்களிடம் கடமைகளை ஒப்படைக்கும் வரையில் அது தொடர்பில் பொறுமையுடன் செயற்படுமாறும், சேவை நிலையங்களைத் திருத்துதல் தொடர்பான ஏதேனும் விசாரணைகள் இருப்பின் இந்த அமைச்சின் http://203.94.94.214/csinq/ இணையவழி முறைமையின் ஊடாக குறித்த விசாரணைகளை முன்வைக்க வேண்டும் என்றும் அறியத் தருகின்றேன்.

05. மேற்படி கடிதத்தின் மூலம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளவாறு திணைக்களத் தலைவர்கள் 2020.05.15 ஆம் திகதியில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அறிவித்த பின் சேவை நிலையங்களைத் திருத்துவதற்கான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான சாத்தியங்கள் இருந்தால் மாத்திரம் அவற்றை நிறைவேற்றுவதற்கு அடுத்த வாரத்தில் (2020.05.18-2020.05.22) நடவடிக்கை எடுக்கப்படும்.

06. என்னால் வழங்கப்படும் இந்த அறிவுறுத்தல்கள் 2018.08.20 ஆம் திகதி பட்டதாரிப் பயிலுநர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கும் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3 தரம் III இற்கும் வகுப்பு 2 தரம் II இற்கும் நியமிக்கப்பட்டு சேவை நிலையத் திருத்தக் கோரிக்கைகளை முன்வைத்துள்ள புதிதாக நியமனம் பெற்றவர்களுக்கு மாத்திரமே ஏற்புடையதாகும் என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்